நாட்பாடசாலை வழங்கல் (Tagesschulangebote)
தேவையானவற்றை தெளிவுபடுத்தும் வினாக்கொத்திற்கு இணைப்பு

இத்துடன் உள்ள வினாக்கொத்து உங்கள் பிள்ளைகளை நாட்பாடசாலையில் பராமரிப்பது தொடர்பான (எக் கிழமைநாள், எத்தனை பிள்ளைகள், எவ்விதமான வழங்கள் போன்றவை) வினாக்களை வினாவுகின்றது. இவ்வினாக்கொத்து ஜெர்மன்மொழி மற்றும் பிரெஞ்சுமொழி ஆகியவற்றில் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே உங்களுக்கு இதை நிரப்பும்போது உதவி தேவைப்படின், உங்கள் பிள்ளையின் ஆசிரியர் அல்லது வேறு யாராவது சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள். இத்துடன் நாங்கள் உங்கள் மொழியில் அடிப்படை விளக்கத்தை உங்களுக்குத் தருவரில் மகிழ்வடைகின்றோம்:

கட்டாய பாடசாலையில் வகுப்பு நடைபெற முன்னர் அல்லது வகுப்பு நடைபெற்ற பின்னர், பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை செல்லும் பிள்ளைகள் சுயவிருப்பின் அடிப்படையில் கற்றல் கோட்பாடு அறிந்தோரால் பராமரிக்கப்படுவர் என்று "நாட்பாடசாலை வழங்கல்" பேர்ண் மாநிலத்தில் விளங்கிக்கொள்ளப்படும். இப்பராமரிப்பு வழங்கல் வாரத்தில் ஒன்று தொடக்கம் ஐந்து நாட்கள் (பாடசாலை விடுமுறை நாட்களில் நடைபெறாது) கிராமசபையின் கோரலின் அடிப்படையில் நடைபெறும்.

நாட்பாடசாலை வழங்கல்கள் 4 மாதிரிகளில் வெவ்வேறு விடயங்களை கொண்டிருக்கக்கூடும்.

- வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு முன் முற்கூட்டிய பராமரிப்பு
- உணவுடன் கூடிய மதிய பராமரிப்பு
- வீட்டுப்பாட பராமரிப்பு மற்றும்
- வகுப்பு நிறைவடைந்த பின்னர் அல்லது பிற்பகல் பாடசாலை இல்லாத நாட்களில் பிற்பகல் பராமரிப்பு

அநேகமாக நாட்பாடசாலை வழங்கல் பாடசாலை நடைபெறும் அதே கூரையின் கீழ் நடைபெறும். ஆயினும் பாடசாலையில் இல்லாது வேறு ஒரு இடத்திலும் நாட்பாடசாலை நடைபெறச் சாத்தியமுண்டு. நாட்பாடசாலைக்கும் கட்டாய பாடசாலைக்கும் இடையில் நெருக்கமான இணைந்த செயற்பாடுண்டு. நாட்பாடசாலையில் பிள்ளைகள் கல்விக்கோட்பாடு கற்றவர்களால் ஆன ஒரு குழுவாலும், கல்விக்கோட்பாடு கற்காத ஒரு குழுவாலும் பராமரிக்கப்படுவர்.

நாட்பாடசாலை வழங்கல்கள்

- வேலை செய்யும் பெற்றோர் தாங்கள் இல்லாத போது தங்கள் பிள்ளைகள் நன்கு பராமரிக்கப்படுகினர் என்று அறிவதால், அவர்களின் சுமை குறைக்கப்படும்.
- பிள்ளைகளுக்கு குடும்பத்திற்கு வெளியே உலகத்தை சரியாகக் கண்டுகொள்ளவும், சமவயதினருடன் தொடர்பை ஏற்படுத்தி, அனுபவத்தைபெறவும் இலகுவாக்குகின்றது.
- வெளிநாட்டு மொழி பேசும் பிள்ளைகளுக்கு வகுப்பறை மொழியைக் கற்க இலகுவாக்கும்.
- சகமாணவர்களையும், ஆசிரியர்களையும் வகுப்பறை தவிர்ந்த சூழலில் நன்றாக அறிவதால், பாடசாலையில் ஒரு தனிப்பட்ட இதமான சூழ்நிலையைக் கொண்டுவரும்.
- பாடசாலையின் கற்றல் தொடர்பான கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும். உ+ம்: பாடசாலைக்கு வீட்டுப்பாடங்கள் செய்துகொண்டு செல்லப்படும்.

நாட்பாடசாலை வழங்கல்கள் பிள்ளைகளுக்கு பின்வரும் சந்தர்ப்பங்களை வழங்கும்

- ஒருங்கிணைந்து வித்தியாசமான மற்றும் ஆரோக்கியமான உணவை உட்கொள்வர் (கலாச்சார அல்லது மத தேவைகள் கவனிக்கப்படும்)
- நாளாந்த வேலைகளில் பங்கெடுக்க, உ+ம்: மேசையை ஒழுங்கு செய்ய, சேர்ந்த உதவு
- வழிநடத்தலுடன் தானாகவே வீட்டுப்படங்களைச் செய்துமுடிக்க
- தன்னிச்சையாக அல்லது வழிநடத்தலுடன் விளையாட அல்லது கைவேலை செய்ய அல்லது தானே ஓய்வெடுக்க
- உள்ளுக்கும், வெளியிலும் அசைவை மேற்கொள்ள

பெற்றோர் இவ்வழங்கல்களை சுதந்திரமாகத் தெரிவு செய்ய முடியும். ஒரு குறிப்பிட்ட பராமரிப்பு மாதிரியை கேட்பது ஒரு தவணைக்கு செல்லுபடியாகும். பெற்றோர் தங்கள் வருமானத்திற்கு ஏற்ப மாநில கட்டணத்தின் அடிப்படையில் தங்கள் பங்கைச் செலுத்தவேண்டும். ஒரு பிள்ளையைப் பராமரிப்பதற்கு மணித்தியாலக் கட்டணம் 0.65 தொடக்கம் 10.85 பிராங்குகளிற்கு இடையில் இருக்கும். உணவுக் கட்டணம் மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.

நாங்கள் உங்களை நேரமெடுத்து இவ்வினாக்கொத்தைப் பூர்த்திசெய்யுமாறு அழைக்கின்றோம். கிராமசபை திட்டமிடமிடுவதற்கு நீங்கள் உங்கள் தேவையைச் சரியாக அறிவிப்பது முக்கியமானது. இத்தேவை அறியும் கணிப்பீட்டின் அடிப்படையில் ஒரு நாட்பாடசாலை வழங்கல் உங்கள் கிராமசபைக்கு வந்தால், பின்னர் நீங்கள், பிள்ளைகளின் பாடநேரத்திட்டத்தை அறிந்தபின்னர், விண்ணப்படிவத்தைப் பெறுவீர்கள். அதன் பின்னரே மேற்கொள்ளப்படும் விண்ணபத்தை செயற்படுத்தும் கடப்பாடு உடையவர்களாவீர்கள்.